# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 05.10.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வாழ்வில் நடந்த சம்பவங்கள் பற்றி ஒருவருக்கு நினைவிருக்கும் என்றால், அதைப் பற்றி முழுமையாக அவருக்கு தெரியும் என்றால், அவர்கள் வந்து என்ன செய்தார்கள்? என்பதைப் பார்க்கின்ற போது மனிதன் உணர்ச்சிவசப்பட்டு அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் என்று கூறுகின்றான்.

**கூறுகின்றார்கள்:** நான் உண்மையாகவே கூறுகின்றேன். இது ஒரு எண்ணமோ அல்லது கற்பனையான விசயமோ அல்ல. மாறாக, திருக்குர்ஆனும் உலக வரலாறும் நபி கரீம் (ஸல்) அவர்கள் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதற்கு முழுமையாக சாட்சி பகர்கின்றது. அவ்வாறில்லையென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக, அதாவது, *அல்லாஹ்வும் அவனது எல்லா மலக்குகளும் தூதர் மீது தரூதை பொழிகின்றனர். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் நபியின் மீது தரூதும் ஸலாமும் சொல்லுங்கள்* என்று குறிப்பாக ஏன் கூறப்பட்டுள்ளது?

**கூறுகின்றார்கள்:** வேறு எந்த நபிக்காகவும் இந்தக் குரல் எழுப்பப்படவில்லை. முழுமையான வெற்றியுடனும் முழுமையான புகழுடனும் இந்த ஒரு மனிதர்தான் வந்தார். அவர் முஹம்மது (ஸல்) என்று அழைக்கப்பட்டார்.

**கூறுகின்றார்கள்:** இந்த வசனத்திலிருந்து வெளிப்படுவது என்னவென்றால், ரஸூல் கரீம் (ஸல்) அவர்களது செயல்கள் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் அல்லாஹ் அவர்களது புகழையும் அவர்களது நற்பண்புகளும் ஓர் எல்லைக்குள் கொண்டு வருவதற்கு எந்தவொரு குறிப்பான சொல்லையும் பயன்படுத்தவில்லை. சொற்கள்கூட கிடைத்திருக்கும். ஆனால் அல்லாஹ் தானே அந்த சொற்களைப் பயன்படுத்தவில்லை. ஏனென்றால், அவர்களது பொருத்தமான நற்செயல்கள் எல்லாவிதமான எல்லையையும் கடந்து உயர்வானதாக விளங்குகிறது. இதுபோன்ற வசனம் வேறு எந்த நபியின் மகிமையைக் குறிப்பிடும் வகையிலும் பயன்படுத்தப்படவில்லை. அவர்களது ஆன்மாவில் எத்தகு உண்மையும் தூய்மையும் இருந்தது என்றால், அன்னாரது செயல்கள் இறைவனது பார்வையில் எந்த அளவு பிரியமானதாக இருந்தது என்றால் அல்லாஹ் நிரந்தரமாக இந்த கட்டளையைப் பிறப்பித்தான். அதாவது வருங்காலத்தில் மக்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் அன்னார் மீது தரூது ஓத வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள போதனைகளை படிக்கும் போதும் அவர்களது அழகிய முன்மாதிரியைப் பார்க்கும் போதும் அதை பின்பற்றுவதற்கும் செயல்படுத்துவதற்கும் முயற்சி செய்வதுடன் அன்னார் மீது தரூதும் ஸலாமும் ஓதுவது ஒரு மூஃமினுடைய பணியாகும். இந்த மகத்தான அருளாளர் நம் மீது எந்த அளவு அருள் செய்துள்ளார்கள்? வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் இறைவனது போதனைகளுக்கு ஏற்ப செயல்படுத்திக் காட்டியவாறு நம்மை இதற்கேற்ப செயல்படுமாறு கூறி நமக்கு இறைவனை சந்திக்கும் வழியைக் காட்டித் தந்துள்ளார்கள்.

அல்லாஹ்வை வணங்குவதில் உயர் தரத்தைப் பெறுவதற்குரிய வழியைக் காட்டித் தந்தார்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமையை நிறைவேற்றுவது தொடர்பாக உள்ள பொறுப்பை உணர்கின்ற தன்மையை மூஃமின்களிடம் உருவாக்கினார்கள். அதன் மூலமாக ஒரு மூஃமின் இறைவனது திருப்தியைப் பெற முடியும்.

இந்த எல்லா விசயங்களும் நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தரூதும் ஸலாமும் ஓதியவாறு உலகிற்கும் அன்னாரது இந்த போதனைகளைப் பற்றி தெரிவிக்க வேண்டும். அவர்களது

அழகையும் அருளையும் உலகிற்கு தெரிவிக்க வேண்டும் என்பதேயாகும். எப்போதும் மற்றவர்கள் முன்னால் பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்விலுள்ள அம்சங்கள் வருகின்றபோது எந்த மக்களது உள்ளத்தில் சிறிதளவாவது நீதியின் ஒளி இருக்குமோ அவர்களால் கருத்து வேறுபாடுகள் இருந்தும் கூட பெருமானாரது வாழ்வின் அழகிய அம்சங்களைப் புகழ்ந்து கூறாமல் இருக்க முடியவில்லை.

இன்றைய நாட்களில் இஸ்லாத்தின் எதிரிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அல்லது அன்னார் கொண்டு வந்த போதனைகள் மீது ஆட்சேபனை செய்கின்றனர். இந்த மக்கள் ஒன்று நீதியிலிருந்தும் காலியாக இருக்கின்ற உள்ளத்தை உடையவர்களாக இருக்கின்றனர் அல்லது அன்னாரது வாழ்வின் அழகிய அம்சங்கள் தொடர்பாக அவர்களுக்கு தெரியாது. மேலும் இதற்காக அவர்கள் முயற்சி செய்வதையும் விரும்புவதில்லை. எனவே, உலகிற்கு அவர்களது வாழ்க்கை தொடர்பாக தெரிவிப்பது நமது பணியாகும். இதற்காக எல்லா வகையான வழிமுறையையும் இதற்கு முன்னரும் நான் பலமுறை கூறி விட்டேன்.

சில மக்களது இயல்பு எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால் அல்லது உலக விசயங்களில் மூழ்கிய நிலையில் அவர்கள் எப்படி ஆகி விடுகின்றனர் என்றால் அவர்கள் மீது உலகவாதிகளின் தாக்கம் அதிகமாக இருக்கின்றது. உலகவாதிகள் ஒரு விசயத்தைக் கூறினால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராகி விடுகின்றார். தன்னைச் சார்ந்துள்ள மக்கள் கூறும் விசயங்களின் தாக்கம் அதிகமாக அவர்கள் மீது ஏற்படுகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி ஒரு விசயத்தை ஒரு முஸ்லிமிடமிருந்து கேட்பதற்குப் பதிலாக தன்னைச் சார்ந்துள்ள மக்களிடமிருந்து அவ்விசயத்தைக் கேட்கும் போது சில நேரங்களில் அதைப் பற்றி சிந்திக்க அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

எனவே, இந்த மக்களைச் சார்ந்துள்ள புகழ்பெற்ற எழுத்தாளர்கள், நூல்களை எழுதியவர்கள், அறிஞர்கள் ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்வு தொடர்பாக எத்தகைய கருத்துக்களை கூறியுள்ளார்களோ அதை மக்களுக்கு எட்ட வைக்க வேண்டும். இந்த சமயத்தில் நான் இப்படிப்பட்ட சில மக்களின் எழுத்துக்களை உங்கள் முன்னால் வைப்பேன். இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையை அறிந்து சிறந்த தாக்கத்திற்கு ஆளாகி அவர்களது தனித்தன்மையை அறிந்து சிறந்த தாக்கத்திற்கு ஆளாகி அவர்களைப் பற்றி எழுதியிருக்கின்றார்கள். இவர்களில் சிலர் எதிரிகளாகவும் உள்ளனர். எதிர்ப்பதில் இவர்கள் முன்னேறியிருந்தனர். ஆனால் உண்மையை எழுதும் கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாகியுள்ளனர்.

செயில் தனது நூலில் ஸ்பெயின் ஹெமிஸ் தொடர்பாக அவர் நல்ல மனிதர் என்று எழுதியுள்ளார். எவ்வாறிருப்பினும், அவர் நல்லவரல்ல. ஆனால் நீதி அவரை இவ்வாறு எழுதும் கட்டாயத்திற்கு ஆளாக்கியிருக்கின்றது.

அவர் எழுதுகின்றார்: முஹம்மது (ஸல்) அவர்கள் முழுமையான முறையில் இயல்பாகவே அவர்களிடம் இருக்கும் தகுதிகளால் அலங்கரிக்கப்பட்டவராக இருந்தார். மிகவும் அழகான தோற்றத்தை உடையவர்களாகவும், மிகுந்த அறிவுத்திறன் கொண்டவர்களாகவும், தொலைநோக்குப் பார்வை உடையவராகவும், விருப்பத்திற்கு உரியவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும், ஏழைகளைக் கவனிப்பவராகவும், ஒவ்வொருவருடனும் பணிவுடன் நடந்து கொள்பவராகவும், எதிரிகளை எதிர்த்து நிற்பதில் உறுதியான நிற்பவராகவும் வீரமிக்கவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனது பெயருக்கு மிகுந்த மரியாதையையும், கண்ணியத்தையும் வழங்குபவராகவும் திகழ்ந்தார்கள். பொய் சத்தியம் செய்பவர்கள், விபச்சாரிகள், அநீதியிழைப்பவர்கள், பொய்யான பழித்துரைகளை பிறர் மீது சுமத்துபவர்கள், வீண் செலவு செய்பவர்கள், பேராசை உடையவர்கள், பொய்யான சாட்சி கூறுபவர்கள் ஆகியோருக்கு எதிராக மிகவும் கடுமையுடன் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

மென்மை, தான தருமங்களைச் செய்வது, கருணை காட்டுவது, நன்றி தெரிவிப்பது, பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களை மதிப்பது தொடர்பாக மிகவும் வலியுறுத்திக் கூறக்கூடியவர்களாகவும், இறைவனைப் புகழ்வதில் மிகவும் அதிகமாக ஈடுபடக்கூடியவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

இப்படியெல்லாம் எழுதியும் கூட சில இடங்களில் இவர் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது குற்றச்சாட்டுகளையும் கூறியுள்ளார்.

**ஸ்டேன்லி லேன் - பூல் என்ற இன்னொரு நூலாசிரியை இவ்வாறு எழுதுகின்றார்:**

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) தனது மூதாதையர்களின் நகரமான மக்காவில் வெற்றியுடன் நுழைந்த போது அவர்களது உயிருக்கு எதிரியாகவும் அன்னாரது இரத்தத்தை குடிக்க தாகமுடையவர்களாகவும் இருந்த மக்காவாசிகள் அனைவரையும் அவர்கள் மன்னித்தார்கள். இது எத்தகு வெற்றியாகவும், தூய்மையான வெற்றியுடன் கூடிய நுழைதலாகவும் இருக்கின்றதென்றால் இதற்கு ஈடான ஓர் உதாரணம் முழு மனித வரலாற்றிலும் கிடைக்காது.

**Outline of History என்ற நூலின் ஆசிரியரான Professor H.G.Wells அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

இஸ்லாத்தின் தூதரின் உண்மைக்கு இதுவே மிகப்பெரிய சான்றாகும். அதாவது, அவர்களைப் பற்றி யார் முதலில் அறிந்திருந்தார்களோ அவர்களே அன்னார் மீது முதலில் நம்பிக்கை கொண்டனர். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய்யாக வாதம் செய்தவர்கள் அல்ல. இஸ்லாத்தில் பெரும் சிறப்புகளும் மகத்தான பண்புகளும் உள்ளன என்ற உண்மையை மறுக்க முடியாது. இஸ்லாத்தின் தூதர் அவர்கள் எத்தகைய ஒரு சமுதாயத்தின் அடித்தளத்தை நிறுவினார்கள் என்றால் அதில் அநீதியிழைத்தல், கொடுமையிழைத்தல் ஆகியவை முற்றிலும் அழிக்கப்பட்டன.

**Delasey Olare என்பவர் தனது நூலான Islam at the Cross Roads -ல் இவ்வாறு எழுதுகின்றார்:**

வரலாறு இந்த விசயத்தை திறந்து வைத்துள்ளது. பலவந்தமாக முஸ்லிம்கள் உலகத்தில் வெற்றி பெற்று வாள் முனையில் தனது ஆதிக்கத்தின் கீழ் வந்த சமுதாயங்களில் இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தினர் என்பது வரலாற்றாசிரியர்கள் எடுத்துக்கூறும் கதைகளில் மிகவும் வீணான மிகவும் வியப்பான ஒரு கதையாகும்.

**மகாத்மா காந்தி தனது பத்திரிகையான Young India -வில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

எவ்வித கருத்து வேறுபாடுமின்றி இலட்சக்கணக்கான மக்கள் மீது ஆட்சி புரிந்து வந்த அந்த நபர் தொடர்பாக நான் எல்லாவற்றையும் அறிய விரும்பினேன். அன்னாரது வாழ்க்கையைப் பற்றி நான் படித்த பிறகு எனக்கு இஸ்லாம் அந்தக் காலத்தில் வாள் மூலமாக மக்களது உள்ளங்களில் இடம்பிடிக்கவில்லை. மாறாக, இந்த இறை தூதரின் எளிமை, தனது பணியில் மூழ்கியிருக்கும் பழக்கம், மிகவும் நுட்பமான முறையில் நண்பர்களுடன் மிகுந்த நேசத்துடன் பழகுவது, அச்சமற்றிருப்பது, இறைவனது இருப்பு மற்றும் தனது நோக்கத்தில் வெற்றி பெறுவது தொடர்பாக முழுமையான உறுதி கொள்வது ஆகிய இந்த விசயங்கள்தான் ஒவ்வொரு துன்ப வேளையிலும் அதை சமாளிக்க வழிவகுத்தது. அதுவே எல்லாரையும் ஒன்றுசேர்த்துக் கொண்டு போக வைத்தது. நான் இந்த இறை தூதரின் வாழ்க்கை தொடர்பாக எழுதப்பட்டுள்ள இந்த நூலின் இரண்டாவது பாகத்தையும் படித்து முடித்த போது அந்த நூல் முடிவுற்றதன் காரணமாக என்னை சோகம் ஆட்கொண்டு விட்டது.

**Sir John Beget Glubb என்ற இவர் Lieutenant General ஆக இருந்தவர். 1986 ஆம் ஆண்டு இவர் வஃபாத் ஆனார். இவர் தமது நூலின் இறுதியில் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

எத்தகைய கருத்து கூறப்பட்டாலும், முஹம்மது (ஸல்) அவர்களது ஆன்மீக அனுபவங்கள் தன்னகத்தே பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிலுள்ள வரலாறு, கிறிஸ்தவ பெரியார்களின் ஆன்மீக அனுபவங்கள் ஆகியவற்றுடன் வியக்கத்தக்க அளவில் ஒத்திருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. இவ்வாறே இந்துக்கள் மற்றும் பிற மதங்களை ஏற்றுக் கொண்டவர்கள் கண்டுள்ள எண்ணற்ற கனவுகள், ஆன்மீக தரிசனங்கள் ஆகியவற்றுடனும் இவற்றிற்கு ஒப்புமை இருப்பது சாத்தியமானதுதான். மேலும், பல நேரங்களில்

இப்படிப்பட்ட அனுபவங்கள் தூய்மையான புனிதத் தன்மையுடைய வாழ்க்கையின் துவக்கத்தில் காணப்படும் அடையாளங்களாக இருக்கின்றது. இந்த சம்பவங்களை மனதின் ஏமாற்றமாகக் கருதுவது ஒரு பொருத்தமான விளக்கமாகத் தெரியவில்லை. ஏனென்றால் இப்படிப்பட்ட சம்பவங்கள் பல மக்களிடத்திலும் ஒன்றுபோல் நிகழ்ந்திருக்கின்றது. இத்தகைய மக்களுக்கு இடையில் நூற்றுக்கணக்கான வருடங்களில் இடைவெளியும், ஆயிரக்கணக்கான மைல்களின் தொலைவும் இருந்தும்கூட, அவர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி கேள்விப்படாத நிலை இருந்தும்கூட, இத்தகைய மக்களது சம்பவங்களில் வழக்கத்திற்கு மாற்றமான ஒப்புமை இருக்கின்றது. இவர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி அறியாத நிலையில், இந்த எல்லா நபர்களும் வியக்கத்தக்க அளவில் இந்த கனவுகளிலும், ஆன்மீக தரிசனங்களிலும் காணப்படும் ஒப்புமையை தன் தரப்பிலிருந்தும் உருவாக்கியுள்ளனர் என்பது அறிவுள்ள விசயமாக இருக்க முடியாது.

**அபிஸீனியாவிற்கு எந்த முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து சென்றனரோ அவர்களைப் பற்றி இவர் இவ்வாறு எழுதுகின்றார்:**

இந்தப் பட்டியலிலிருந்தும் ஏறக்குறைய இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அனைவருமே இந்த ஹிஜ்ரத்தில் பங்கேற்றனர் என்பது தெரிகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடுமையான இயல்பைக் கொண்ட மக்கத்துவாசிகளுக்கு மத்தியில், நிச்சயமாக மிக குறைந்த எண்ணிக்கையில் இருந்த தன்னைப் பின்பற்றுபவர்களுடன் இருந்து வந்தார்கள். இந்த நிலையானது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது நல்லொழுக்கத்தை தைரியத்துடன் வெளிப்படுத்திக் காட்டுவது மற்றும் ஈமானின் வலிமையில் உயர்வான தரத்தில் நிலைபெற்றிருந்தார்கள் என்பதை நிரூபிக்கின்றது.

**John William Draper தனது நூலான History of the Intellectual Development of Europe -ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

Justinian மரணமடைந்து 4 வருடங்கள் கழிந்த பிறகு கி.பி.569 ஆம் ஆண்டில் மக்காவில் எப்படிப்பட்ட ஒரு மனிதர் பிறந்தார் என்றால், அவர் எல்லா மனிதர்களையும் விட மிகவும் அதிகமாக மனிதயினத்தின் மீது தனது தாக்கத்தை விட்டுச் சென்றுள்ளார். அந்த மனிதர் முஹம்மது ஆவார். (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இவரை சில ஐரோப்பிய மக்கள் பொய்யர் என்று கூறுகின்றார். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் எத்தகைய சிறப்புகள் இருந்தன என்றால் அதன் மூலம் பல சமுதாயங்களின் நற்பாக்கியம் தீர்மானிக்கப்பட்டது. அவர் தப்லீக் செய்கின்ற ஒரு சிப்பாய் ஆகத் திகழ்ந்தார். அவர் ஏறும் மேடைகள் சொற்செறிவால் நிரம்பியிருந்தன. களத்தில் இறங்கும்போது அவர் வீரராகத் திகழ்ந்தார். அவரது மார்க்கத்தின் சாராம்சம் இறைவன் ஒருவன் என்பதேயாகும். அதாவது அவரது மார்க்கத்தின் சுருக்கம் இந்த ஒரே கருத்தில் இருக்கின்றது. அது இறைவன் ஒருவன் என்பதுதான். இந்த உண்மையை விளக்குவதற்காக அவர் வெளிப்படையாக தெரிகின்ற விசயங்களை வைத்து வாதம் செய்யவில்லை. மாறாக, அவர் தன்னை பின்பற்றுபவர்களிடம் தூய்மை, தொழுகை, நோன்பு போன்ற விசயங்களைப் பற்றி போதனை செய்தவாறு சமுதாய நிலைமைகளை செயலளவில் சிறப்பானதாக ஆக்கினார்கள். அந்த நபர் ஸதக்கா மற்றும் தான தருமங்களை செய்வதற்கு மற்ற எல்லா விசயங்களையும் விட முன்னுரிமை வழங்கினார்.

**புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான William Montgomery என்பவர் Muhammad at Madina என்ற தனது புகழ்பெற்ற நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:**

முஹம்மது (ஸல்) அவர்களையும் இஸ்லாத்தின் ஆரம்பகால வரலாறையும் எவ்வளவு சிந்தித்தாலும் அந்த அளவு அவர்களது வெற்றிகளின் விரிவான நிலையைப் பார்த்து மனிதன் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றான். அப்போதுள்ள நிலைமை அவர்களுக்கு எத்தகு சந்தர்ப்பத்தை வழங்கியது என்றால் அத்தகு சந்தர்ப்பம் மிகக் குறைவான மக்களுக்கே கிடைக்கின்றது. அவர்கள் அந்தக் காலத்திற்கு மிகவும் பொருத்தமான ஒரு மனிதராகத் திகழ்ந்தார்கள். பிறகு அவர்களிடம் தொலைநோக்குப் பார்வை, ஆட்சி புரிவதற்கான தகுதிகள், அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கை, அல்லாஹ்தான் அவர்களை அனுப்பியுள்ளான் என்பதில் அவர்களுக்கு இருந்த உறுதி ஆகியவை இல்லாமல் இருந்திருந்தால் வரலாற்றில் ஒரு முக்கியமான

பகுதி எழுதப்படாமல் விடுபட்டிருக்கும். பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை பற்றிய இந்த நூல் ஒரு மகத்தான ஆதமின் மகனைப் புரிந்து கொள்வதற்கும் அவருக்கு கண்ணியமளிக்கவும் உதவும் என்று நான் நம்புகின்றேன். இதை எழுதிய நபர் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக அவர்களுக்கு சாதகமான கருத்துக்களை கூறக்கூடியவர் அல்ல.

**புகழ்பெற்ற கிறிஸ்தவ வரலாற்றாசிரியர் Reverent Bosworth Smith இவ்வாறு எழுதுகின்றார்:**

மதம் மற்றும் ஆட்சியின் வழிகாட்டியும் கவர்னர் என்ற நிலையில் கெய்ஸராகவும் இருக்கின்ற இரு நபர்களின் நிலை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) என்ற ஒரு நபரிடம் இணைந்திருந்தது. அவர்கள் போப் ஆக இருந்தார்கள். ஆனால் போப்பைப் போன்று வெளிப்படையான பகட்டிலிருந்தும் தூய்மையாக இருந்தார்கள். அவர்கள் கெய்ஸராக இருந்தார்கள். ஆனால் கெய்ஸரைப் போன்று இடங்களையும் பொருள்களையும் குவிப்பதை விட்டும் தன்னிறைவு பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். முறையாக இராணுவம் இல்லாத நிலையிலும் இறைவனது பெயரால் மட்டும் உலகில் அமைதியையும் ஒழுங்கையும் ஒருவர் நிலைபெறச் செய்தார் என்றால் அது முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டுமேயாவார்கள். அவர்களுக்கு இந்த பொருள்கள் இல்லாமலேயே எல்லா ஆற்றல்களும் கிடைத்தன.

**பிறகு Bassworth Smith அவர்கள் தனது நூலான Muhammad and Muhammadanism -ல் இவ்வாறு எழுதுகின்றார்.**

அவர்களது பிரச்சாரத்தை அதாவது தூதுத்துவத்தை அவர்களைப் பற்றி நன்றாக தெரிந்தவர்கள் தான் முதலில் ஏற்றுக் கொண்டார்கள். உதாரணமாக, பெருமானார் (ஸல்) அவர்களது மனைவி, அவர்களது அடிமை, அவர்களது சிறிய தந்தையின் மகன், அவர்களது பழைய நண்பர் ஆகியோர் உள்ளனர். தனது பழைய நண்பரைப் பற்றி முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தவர்களில் அந்தவொரு மனிதர் மட்டும் தான் தூதுச் செய்தியை கேட்டதும் முகம் திருப்பவுமில்லை. தடுமாற்றம் அடையவுமில்லை என்று கூறினார்கள். மற்ற தூதர்களைப் போன்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களது நற்பாக்கியம் சாதாரணமான ஒன்றல்ல. ஏனென்றால், அவர்களது மகத்துவத்தை அவர்களைப் பற்றி சரியாக தெரியாமல் இருக்கின்ற மக்களே மறுக்கின்றனர்.

**பிறகு Bassworth அவர்கள் மேலும் எழுதுகின்றார்கள்:**

எந்த தீய சடங்குகளிலிருந்தும் முஹம்மது (ஸல்) நம்மை தடை செய்துள்ளார்களோ அதனை அவர்கள் தடை மட்டும் செய்யவில்லை. மாறாக, அவற்றை அவர்கள் முற்றிலுமாக அழித்து விட்டார்கள் அல்லது மனிதர்களைப் பலியிடுவது, சிறு பெண் குழந்தைகளைக் கொலை செய்வது, கொலைக் குற்றம் தொடர்பான சண்டைகள் , அதிகமான பெண்களுடன் குறிப்பிட்ட வரையறையின்றி திருமணம் செய்து கொள்வது, அடிமைகளுடன் நடக்கின்ற முடிவுறாத கொடுமைகள், அநீதிகள், மது அருந்துவது, சூதாடுவது போன்ற விசயங்களை அவர்கள் தடுக்காமல் இருந்திருந்தால் இத்தகு தீமைகள் எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக அரபு நாட்டிலும் அதற்கு அருகில் இருக்கும் நாடுகளிலும் நீடித்திருக்கும். அவர்கள் இந்த அனைத்து தீமைகளையும் அழித்து விட்டார்கள்.

மேலும் இவர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது நோக்கத்தின் உண்மை மற்றும் நன்மை செய்வதில் மிகவும் ஆழமான நம்பிக்கை வைத்தவாறு எவற்றையெல்லாம் செய்தார்களோ அதுபோன்று வேறு எந்த நபரும் இவ்விசயங்களில் ஆழமான உறுதியில்லாமல் எதையும் செய்ய முடியாது. தனது நோக்கம் தொடர்பாகவும், தனது வாதம் தொடர்பாகவும், தான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவன் என்பதன் மீதும் ஆழமான நம்பிக்கையும் உறுதியும் இருந்ததால் தான் இத்தகைய புரட்சியை அவர்களால் ஏற்படுத்த முடிந்தது.

எழுதுகின்றார்: அவர்களது வாழ்வின் ஒவ்வொரு சம்பவமும் அவர்களை எத்தகு உண்மையை விரும்பக்கூடிய உணர்வுகளால் நிரம்பியுள்ள ஒரு மனிதராக நிரூபிக்கின்றது என்றால் அந்த மனிதர்

எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் தனது கொள்கைகள், கருத்துக்கள் ஆகியவற்றின் பக்கம் கொஞ்சம் கொஞ்சமாக துன்பங்களை சகித்தவாறு சென்றடைவதற்கு முயற்சிகளை செய்கின்றார்.

மேலும் எழுதுகின்றார்: அரபு மக்களுக்கு புரட்சி தேவை என்று கூறுவது அல்லது வேறு சொற்களில் புதிய இறைதூதர் தோன்ற வேண்டிய நேரம் வந்து விட்டது என்று கூறப்படுவது உண்மையென்றால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த தூதராக ஏன் இருக்கக் கூடாது? இந்த தலைப்பில் இந்த காலத்திலுள்ள நூலாசிரியர் ஸ்பிரிஞ்சர் அவர்கள் பல வருடங்களாக ஒரு இறை தூதரின் வருகை பற்றிய எதிர்பார்ப்பும் இருந்தது. அதைப் பற்றிய முன்னறிவிப்பும் இருந்தது என்பதை நிரூபித்துள்ளார்.

**Bassworth மேலும் கூறுகின்றார்:**

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் பல்வேறு நிலைமைகளில் எந்த அளவு மாறியுள்ளார்கள் என்பதில் எனக்கு வியப்பு அல்ல. மாறாக, அவர்களிடத்தில் எந்த அளவு குறைவாக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதுதான் வியப்பாக இருக்கின்றது. ஆடு மேய்ப்பவராகவும், சிரியாவுக்கு சென்று வியாபாரம் செய்பவராகவும், ஹிரா குகையில் தனிமையில் சில நாட்கள் இறைவணக்கத்தில் ஈடுபடுபவராகவும், சிறுபான்மையாக இருக்கக்கூடிய ஒரு ஜமாஅத்தின் சீர்திருத்தவாதி என்ற நிலையிலும் (அதாவது மக்காவில் அவர்கள் இருந்த சமயத்திலும்) சொந்த ஊரை விட்டு விட்டு அவர்கள் மதீனாவில் இருந்த நாட்களிலும், எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வெற்றி வீரர் என்ற நிலையிலும், ஈரானிலுள்ள அரசர்கள் ஹெர்கல் மன்னர் ஆகியோரின் சம தகுதியில், தான் இருக்கின்ற நிலையிலும் நாம் அவர்களைப் பார்க்கின்ற போது எவ்வித தடுமாற்றமும் இல்லாத ஒரு உறுதியான நிலையை நாம் அவர்களிடம் பார்க்க முடியும்.

கூறுகின்றார்: வேறு ஒரு நபரது வெளிப்படையான நிலைமைகளில் இந்த அளவு அதிக மாற்றங்கள் ஏற்பட்டிருந்து அவற்றை சந்திக்கும் போது அவரது வாழ்க்கையில் இந்த அளவு குறைவான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்று எனக்கு தோன்றவில்லை. முஹம்மது (ஸல்) அவர்களது வெளிப்படையான நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. ஆனால் இந்த எல்லா நிலைமைகளிலும் எனக்கு அவர்களது தனிதன்மையானது ஒன்றுபோல் தென்படுகின்றது.

**பிறகு Washington Irvin தனது நூலான Life of Muhammad -ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த போர்களில் அவர்களுக்கு கிடைத்த வெற்றிகள் அவர்களிடம் எவ்வித தற்பெருமையையும் ஏற்படுத்தவில்லை. கர்வத்தை ஏற்படுத்தவில்லை. கற்பனையாகத் திகழும் மகிமையை, உயர்வை அது உருவாக்கவில்லை. இந்த வெற்றிகளில் அவர்களுக்கு சுய நோக்கங்கள் இருந்திருக்கும் என்றால், அது கண்டிப்பாக இந்நிலையை அவர்களிடம் ஏற்படுத்தியிருக்கும். தனக்கு சக்தி கிடைத்த அந்த நாட்களிலும் கூட தனது பழக்க வழக்கத்திலும், தோற்றத்திலும் மிகவும் துன்பம் நிறைந்த நிலைமைகளில் அவர்களிடம் காணப்பட்ட அதே எளிமையை அவர்கள் கடைபிடித்து வந்தார்கள். மாறாக, அவர்கள் அரசராக வாழ்ந்த சமயத்தில் கூட அவர்களது அறையில் ஒரு நபர் நுழைகின்ற சமயத்தில் அவசியமில்லாமல் அவர்களுக்கு மரியாதை செய்வதை வெளிப்படுத்திக் காட்டினால் அவர்கள் அதை விரும்பாமல் இருந்தார்கள்.

**பிறகு வரலாற்றாசிரியரான Sir William Muir அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் பலவற்றை எழுதியுள்ளார். அவரும் இவ்வாறு எழுதுகின்றார்:**

தனது ஒவ்வொரு பணியையும் முழுமையாக செய்து முடிப்பவராக அவர்கள் இருந்தார்கள். எந்தவொரு பொருளும் அவர்களுக்கு முன்னால் கிடக்காத வரை அவர்கள் தமது கைகளால் அதை எடுப்பதில்லை. சந்திப்பதில் கூட அவர்களது வழிமுறை இவ்வாறே இருந்தது. யாரிடமாவது பேசுவதற்காக அவர்கள் திரும்பும் போது தமது முகத்தை மட்டும் அவரது பக்கம் திருப்பாமல் தனது முகத்தையும் உடலையும் முழுவதுமாக அந்த நபர் பக்கம் திருப்புவார்கள். யாரிடம் அவர்கள் முஸாபா செய்தாலும் தமது கைகளை

முதலில் அவர்கள் விடுவித்ததில்லை. இவ்வாறே தனக்கு தெரியாத ஒரு நபரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது தமது பேச்சை இடையில் அவர்கள் நிறுத்திக் கொள்வதில்லை. அந்த நபர் கூறும் விசயங்களை அவர்கள் முழுமையாக கேட்பார்கள். அவர்களது வாழ்க்கையில் அவர்களது குடும்பத்தில் தென்படுகின்ற எளிமை மிகைத்து இருந்தது. ஒவ்வொரு பணியையும் தாமே செய்கின்ற பழக்கம் அவர்களிடம் இருந்தது. அவர்கள் எப்போது சதகா கொடுத்தாலும் அதை கேட்பவருக்கு தமது கையாலேயே அதை வழங்குவார்கள். வீட்டில் நடைபெறும் வேலைகளில் தமது மனைவிகளுக்கு அவர்கள் உதவி செய்து வந்தார்கள்.

பிறகு அவர் எழுதுகின்றார்: எவ்வாறு நதி நீர் கரை வரை வந்து சேர்கின்றதோ அவ்வாறே ஒவ்வொரு சாதாரண மனிதரும் கூட அவர்களை சந்திக்க அவர்களிடம் வர முடிந்தது. வெளியிலிருந்து வருகின்ற குழுவினரை மதிப்புடனும் மரியாதையுடனும் அவர்கள் வரவேற்றார்கள். அந்த குழுவினரின் வருகை மற்றும் ஏனைய அரசாங்க விசயங்களை அணுகுவதில் முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் ஒரு முழுமை பெற்ற ஆட்சியாளரிடம் இருக்க வேண்டிய எல்லா தகுதிகளும் இருந்தன என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு எழுதத் தெரியாது என்பதுதான் எல்லாவற்றையும் விட மிகவும் வியப்பான விசயமாகும்.

**Sir William Muir அவர்களே எழுதுகின்றார்:**

தன்னைப் பின்பற்றுகின்ற மிக சாதாரண நபரிடம் கூட அவர்கள் சிறந்த நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வதுடன் அவர்களது நிலைமைகளை கருத்தில் கொள்பவராக அவர்கள் இருந்தார்கள். வெட்கம், பரிவு, பொறுமை, ஈகைக்குணம், பணிவு ஆகியவை அவர்களது நல்லொழுக்கத்தில் சிறப்பாக தென்படுகின்ற அம்சங்களாகும். இதன் காரணமாக தனது சுற்றுச்சூழலில் இருந்து வரும் ஒவ்வொரு நபரையும் அவர்கள் தன் பக்கம் ஈர்த்து விடுவார்கள். இல்லை என்று சொல்வதற்கு அவர்கள் விரும்ப மாட்டார்கள். கேட்கின்ற ஒரு நபரின் வேண்டுதலை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை என்றால் அமைதியாக இருப்பதற்கே அவர்கள் முன்னுரிமை வழங்கினார்கள். எவரது அழைப்பையும் அவர்கள் மறுத்தார்கள் என்று நாம் கேள்விப்படவில்லை. அந்த அழைப்பு எவ்வளவு சாதாரணமானதாக இருந்தாலும் சரியே! ஒருவர் வழங்கிய அன்பளிப்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அந்த அன்பளிப்பை பெற ஒருபோதும் அவர்கள் மறுத்ததில்லை. அவர்களது சபையில் இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் நான்தான் அவர்களது மிக முக்கியமான விருந்தாளியாக இருக்கின்றேன் என்ற எண்ணம் ஏற்படுகின்ற வகையில் நடந்து கொள்வது வேறு எவரிடமும் இல்லாத அவர்களிடம் மட்டும் காணப்படும் சிறப்பு அம்சமாகும்.

பிறகு எவராவது தனக்கு கிடைத்த வெற்றியின் காரணமாக மகிழ்ச்சியைத் தெரிவித்தால், அவரிடம் தமது உணர்வை வெளிப்படுத்தியவாறு அவர்கள் முஸாபா செய்வார்கள். மேலும் அவரை கட்டித் தழுவுவார்கள். புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் துன்பங்களால் சூழப்பட்டவர்களாகவும் இருக்கின்ற நபர்களிடம் மிகுதியான மென்மையுடன் நடந்து கொள்வார்கள். விளையாடிக் கொண்டிருக்கும் சிறு குழந்தைகளிடம் தாமே சென்று ஸலாம் கூறுவதில் எவ்வித கண்ணியக் குறைவையும் அவர்கள் உணர்ந்ததில்லை. உணவுப் பற்றாக்குறையின் போது மற்றவர்களுக்கு, தான் உண்ணும் உணவிலிருந்து வழங்குவார்கள். உணவு உண்ணும் போது அவர்களை தம்முடன் சேர்த்துக் கொள்வார்கள். ஒவ்வொருவருக்கும் எளிதான நிலையை ஏற்படுத்த எப்போதும் முயற்சி செய்து வருவார்கள். மென்மையான கருணைமிக்க இயல்பு அவர்களது எல்லா சிறப்பான நற்பண்புகளிலும் மிகுதியாக தென்பட்டது. முஹம்மது (ஸல்) அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளும் ஒரு நண்பராக இருந்தார்கள். அவர்கள் அபூபக்கரை தனது சகோதரரை விட அதிகமாக நேசித்தார்கள். அலியிடம் ஒரு தந்தையின் பரிவைக் காட்டினார்கள். விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸெய்திற்கு இந்த அன்பு காட்டும் நபியிடம் எந்த அளவு பற்று இருந்தது என்றால், அவர் தனது தந்தையாருடன் செல்வதற்குப் பதிலாக மக்காவில் இருப்பதற்கு முன்னுரிமை வழங்கினார். தன்னைக் கண்காணித்து வந்தவரது கைகளைப் பற்றியவாறு நான் உங்களை விட்டு பிரியமாட்டேன். நீங்கள் தான் என்னுடைய தாயும் தந்தையும் ஆவீர்கள் என்று அவர் கூறினார். நட்பின்

இந்த உறவு ஸெய்து வஃபாத் ஆகும் வரை இருந்தது. ஸெய்தின் மகனாக உஸாமாவிடமும் அவரது தந்தையின் காரணமாக எப்போதும் அவருடன் மிகுந்த அன்புடன் அன்னார் நடந்து கொண்டார்கள்.

உஸ்மானும் உமரும் அவர்களுடன் ஒரு சிறப்பான உறவை வைத்திருந்தார்கள். அவர்கள் ஹுதைபிய்யா என்ற இடத்தில் பைஅத்தே ரிஸ்வான் நடந்த போது தனது ஒரு பாவமும் அறியாத மருமகனுக்காக தனது உயிரையே அர்ப்பணிக்க உடன்படிக்கை செய்து கொண்டது இந்த உண்மையான நட்பின் ஒரு உதாரணமாகும். முஹம்மது (ஸல்) அவர்கள் சற்றும் தடுமாற்றம் அடையாமல் வெளிப்படுத்திக் காட்டிய நேசத்தை எடுத்துக் காட்டும் பல சம்பவங்களையும் நம்மால் கூற முடியும். எந்தவொரு சமயத்திலும் இந்த நேசம் பொருத்தமற்றதாக இருக்கவில்லை. மாறாக ஒவ்வொரு சம்பவமும் இத்தகைய உணர்வையும் நேசத்தையும் பிரதிபலிக்கின்ற கண்ணாடியாக இருக்கின்றது.

மேலும் எழுதுகின்றார்: தனக்கு ஆற்றல் கிடைத்த உச்சகட்ட நிலையிலும் கூட அவர்கள் நீதியுடன் நடந்து கொள்பவராகத் திகழ்ந்தார்கள். எதிரிகளுடன் மென்மையாக நடந்து கொள்வதில் சிறிதளவு கூட அவர்கள் குறை வைக்கவில்லை. மக்கத்துவாசிகளின் மிக நீண்ட காலமாக கிளர்ச்சிப் போக்கில் அவர்கள் இழைத்த கொடுமைகளின் விளைவானது மக்காவை வெற்றி கொண்டவரை மற்றவர்களது இரத்தத்துடன் விளையாட வைத்திருக்க வேண்டும். அவர்களுக்காக நெருப்பு மூட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களோ சில குற்றவாளிகளைத் தவிர மற்றவர்களுக்கு பொது மன்னிப்பிற்கான அறிவிப்பை செய்தார்கள். கடந்த காலத்தில் நடந்த எல்லா விதமான கசப்பான உணர்வுகளையும் முற்றிலுமாக அவர்கள் மறந்து விட்டார்கள். பரிகாசத்துடனும், அவமரியாதையுடனும் நடந்து கொடுமைகளை இழைத்த பிறகும் கூட அவர்கள் தமது கடுமையான எதிரிகளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். மதீனாவில் அப்துல்லாஹ் மற்றும் தன்னிடமிருந்து முகம் திருப்பிச் சென்று விட்ட நண்பர்கள் (அதாவது முனாஃபிகீன்கள்) பல வருடங்களாக அவர்களது திட்டங்களில் தடைகளை ஏற்படுத்தினார்கள். அவர்களது ஆட்சியில் இடையூறுகளை ஏற்படுத்தி வந்தனர். அவர்களிடம் கண்டும் காணாமல் அன்னார் நடந்து கொண்டதும் ஒரு ஒளிமயமான உதாரணமாகத் திகழ்கிறது. இவ்வாறே அவர்களுக்கு முன்னால் தலைகுனிந்து நின்ற பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்தவர்களுடன் அவர்கள் வெற்றியின் போது மென்மையாக நடந்து கொண்டதுடன் வெற்றி கிடைப்பதற்கு முன்னர் அவர்களை கடுமையாக எதிர்த்தவர்களுடன் கூட அவர்கள் இவ்வாறு மென்மையாக நடந்து கொண்டார்கள்.

**முஹம்மது (ஸல்) அவர்களையும், திருக்குர்ஆனையும் எதிர்த்து வில்லியம் மூர் அவர்கள் பல விசயங்களை எழுதியுள்ளார். ஆனால் இங்கு அவர் எழுதுகின்றார்:**

முஹம்மது (ஸல்) அவர்கள் மீது யாரெல்லாம் முதலாவதாக ஈமான் கொண்டார்களோ அவர்கள் உயர்வான நல்லொழுக்கத்தின் எஜமானர்களாக இருந்தார்கள் என்பது முஹம்மது (ஸல்) அவர்களது உண்மைக்கு ஆதரவாகத் திகழும் ஓர் அடையாளமாக இருக்கின்றது. அவர்களது நண்பர்கள், குடும்பத்திலுள்ள நபர்கள் ஆகியோர் அவர்களது சொந்த வாழ்க்கை பற்றி நன்கு தெரிந்திருந்தார்கள். அவர்களால் ஒரு ஏமாற்றக்கூடிய நயவஞ்சரிடம் தமது குடும்ப உறவுகளிலும் வெளியில் அவர் நடந்து கொள்ளும் முறையிலும் தென்படுகின்ற பொதுவான முரண்பாடுகளை அவரது வாழ்க்கையில் பார்க்க முடியவில்லை.

**Sir Thomas Carlyle பெருமானார் (ஸல்) அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தது பற்றி இவ்வாறு எழுதுகின்றார்:**

இன்னொரு விசயத்தையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. அவர்களுக்கு எந்தவொரு மத்ரஸாவின் கல்வியும் கிடைக்கவில்லை. எதனை நாம் School Learning - பள்ளிக்கூடக் கல்வி என்று கூறுகின்றோமோ அப்படி எதுவுமே அவர்களுக்கு கிடைக்கவில்லை. எழுதும் திறன் அரபிகளுக்கு முற்றிலும் புதியதாக இருந்தது. முஹம்மது (ஸல்) அவர்களால் தானாக எழுத முடியாது என்ற கருத்து முற்றிலும் உண்மையானதாகும். அவர்களுக்கு கிடைத்த அனைத்துக் கல்வியும் பாலைவன சுற்றுச்சூழலில் அங்கு

வசிப்பதன் மூலம் கிடைக்கும் அனுபவங்களையே சுற்றி வந்தன. இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் தனது இருள் நிறைந்த பகுதியில் இருந்தவாறு தனது இதே பௌதீக கண்களால் அவரால் எதைப் பெற முடியும்? நூல்கள் கூட படிப்பதற்கு கிடைக்காது என்பதை பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. இருள் நிறைந்த காடுகளில் தான் கேள்விப்பட்ட விசயங்கள், தானே கேள்விப்பட்ட விசயங்கள், தானே பார்த்த காட்சிகள் ஆகியவற்றைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த அறிவும் இருக்கவில்லை. அவர்களுக்கு முன்னர் இருந்து வந்த ஞானமிக்க விசயங்களும், அரபி தேசத்தைத் தவிர மற்ற பகுதிகளில் இருந்து வந்த ஞானமிக்க விசயங்கள் அவர்கள் வரை சென்றடையாத காரணத்தால் அவை அவர்களுக்கு கிடைக்காததற்கு சமமாகும். இப்படிப்பட்ட ஆட்சியாளர்கள், ஆலிம்கள் ஆகியோரில் ஒருவர் கூட இந்த மகத்தான மனிதரிடம் நேரடியாக பேசியது கூட இல்லை. காடுகளில் அவர்கள் தன்னந்தனியாக இருந்து வந்தார்கள். இவ்வாறே இயற்கையுடன் ஒன்றியிருப்பதும் தமது சிந்தனைகளின் சுழற்சியிலும் இவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

**பிறகு அவர்களது திருமணம் தொடர்பாகவும் குடும்பத்துடனுள்ள தொடர்புகள் பற்றியும் அவர் இவ்வாறு எழுதுகின்றார்:**

அவர் எவ்வாறு கதீஜாவின் தோழரானார்? எவ்வாறு விதவையாக இருக்கும் ஒரு செல்வந்தரின் வியாபாரத்தை நடத்துபவராக பயணம் செய்து சிரியாவில் நடைபெற்ற வியாபார சந்தைகளில் பங்கு பெற்றார்? இவற்றையெல்லாம் எப்படி அவர் செய்தார்? மிக அதிகமாக நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வது, சிறந்தத் திறமை ஆகியவற்றால் தான் இதை அவரால் செய்ய முடிந்தது என்பதைப் பற்றி ஒவ்வொருவருக்கும் நன்றாக தெரியும்.

கதீஜா (ரலி) அவர்களின் உள்ளத்தில் அவர்களுக்காக கண்ணியமும், நல்லுணர்வுகளும் எப்படி உருவாகியது? அரபியிலுள்ள நூலாசிரியர்கள் கூறியிருப்பது போன்று இந்த இருவரது திருமணம் தொடர்பான விசயங்கள் மிகவும் உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் அறிந்து கொள்வதற்கு தகுதியுடையதாகும் இருக்கின்றது. முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அப்போது வயது 25 ஆக இருந்தது. கதீஜா அவர்களின் வயது 40 ஆக இருந்தது.

பிறகு எழுதுகின்றார்: தனக்கு நன்மை புரிந்த இந்த பெண்ணுடன் அன்பு நிறைந்த நிம்மதியான முழுமையான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கதீஜாவுடன் உண்மையான அன்பு வைத்திருந்தார்கள். அவர்களுக்காகவே ஆகி விட்டார்கள் என்பது தெரிய வருகிறது. வாழ்க்கையின் இந்த காலக்கட்டத்தை அவர்கள் எப்படி கழித்தார்கள்? என்பதும் அதுபற்றி எவரும் ஆட்சேபனை செய்ய முடியாமல் இருப்பதும் அவர்களை பொய் நபி என்று கூறுவதில் இந்த உண்மை தடை கற்களாக இருக்கின்றன. இந்தக் காலக்கட்டம் மிகவும் எளிமையாகவும் நிம்மதியாகவும் கழிந்தது. எதுவரையென்றால் அவர்களது வாலிப பருவம் இவ்வாறே கழிந்தது.

**பிறகு Thomas Carlyle அவர்களே எழுதுகின்றார்கள்:**

மக்களிடம் அதாவது கிறிஸ்தவர்களிடம் முஹம்மது (ஸல்) அவர்கள் பொய் வாதம் செய்வதில் திறமைமிக்கவராகவும், பொய்யின் மொத்த உருவமாகவும், பொய்யாக நபித்துவ வாதம் செய்பவராகவும் இருந்தார் என்ற கருத்து பிரசித்தி பெற்று திகழ்கிறது. மேலும் இவரது மதம் பைத்தியக்காரத்தனம் மற்றும் வீணான எண்ணங்களின் தொகுப்பாகும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இப்போது இந்த எல்லா விசயங்களும் மக்களது பார்வையில் தவறானவையாக ஆகிவிட்டது. இந்த பொய்யான விசயங்களை காழ்ப்புணர்ச்சியுள்ள கிறிஸ்தவர்கள் இந்த மனிதர் (ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) தொடர்பாக உருவாக்கியிருக்கின்றார்கள். அவை உறுதியாக நமது இழிவிற்கு காரணமாகி விடும். எந்த விசயங்களை இந்த மனிதர் தமது நாவால் கூறினார்களோ அவை கடந்த 1200 வருடங்களாக 18 கோடி மக்களுக்கு நேர்வழியின் இலக்கை நிர்ணயிக்கக் கூடியதாக இருக்கின்றது.

**இதை 19வ நூற்றாண்டில் இவர் கூறியுள்ளார். அவர் கூறுகின்றார்:**

இப்போது எத்தனை பேர் முஹம்மது (ஸல்) அவர்களது வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துள்ளார்களோ அதைவிட அதிகமாக வேறு எந்த நபரது வார்த்தைகள் மீதும் இந்தக் காலத்திலுள்ள மக்கள் நம்பிக்கை வைப்பதில்லை. பொய்யான மனிதர் இந்த மதத்தைப் பரப்பினார் என்பதை விட எனது பார்வையில் மோசமான வேறு சிந்தனை இருக்க முடியாது. அதாவது இது முற்றிலும் தவறான விசயம் என்று அவர் கூறுகின்றார்.

**பிறகு பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்த ஒரு தத்துவவாதி Lamartime அவர்கள் தமது History of Turkey என்ற நூலில் எழுதுகின்றார்:**

எந்தவொரு மனித மேதையின் தகுதியைப் பிரித்தறிவதற்கு மூன்று அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டால் அவை, அப்படிப்பட்டவரது நோக்கம் எவ்வளவு மகத்தானது? அவர்களிடம் உள்ள வசதிகள் எந்த அளவு எல்லைக்குட்பட்டதாக இருந்தது? பிறகு அவரால் ஏற்பட்ட விளைவுகள் எவ்வளவு மகத்தானது? முஹம்மது (ஸல்) அவர்களுடன் போட்டி போடுவதற்கு தைரியம் காட்டுகின்ற எந்த நபர் உங்களுக்கு கிடைப்பார்? உலகில் விண்ணைத் தொடுகின்ற புகழைப் பெற்ற மனிதர்கள் வெறும் சில இராணுவ வீரர்கள், சட்டதிட்டங்கள், மேலும் அரசுகள் ஆகியவற்றை தோற்கடித்தார்கள். அவர்கள் வெறும் உலக அரசாங்கங்களை மட்டுமே நிறுவினர். அவற்றில் கூட சில சக்திகள் அவர்களது கண்களுக்கு முன்னாலேயே உடைந்து துண்டு துண்டாகி விட்டன. ஆனால், முஹம்மது (ஸல்) அவர்கள் உலக அரசுகள், பல்வேறு சமுதாயங்கள், பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களை மட்டுமல்லாமல் உலகின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் ஒரு பெரும் பகுதியை ஓரிடத்தில் ஒன்றுசேர்த்து விட்டார்.

மேலும் அவர் பலியிடப்படும் இடங்கள், கடவுள்கள், மதங்கள், ஆன்மா, கொள்கைகள், எண்ணங்கள் ஆகியவற்றில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியுள்ளார். முஹம்மதின் (ஸல்) அடித்தளம், அவர்களிடம் ஒரேயொரு நூல் மட்டும்தான் இருந்தது. அதன் ஒவ்வொரு எழுத்தும் சட்டமாக ஆகி விட்டது. அந்த நபர் பல மொழி பேசுகின்ற ஒவ்வொரு நபருக்கும் பல்வேறு இனங்களைச் சார்ந்த ஒவ்வொரு நபருக்கும் ஓர் ஆன்மீக தனித்தன்மையை வழங்கினார்கள்.

**பிறகு எழுதுகின்றார்:**

முஹம்மது (ஸல்) அவர்கள் அரசியல்வாதியாகவும், மார்க்க சட்டத்தைப் புரிந்தவராகவும், இறை தூதராகவும், போர் வீரராகவும், எண்ணங்களை வெற்றி கொள்பவராகவும், அறிவுப்பூர்வமான போதனைகளில் மறுமலர்ச்சியைக் கொண்டு வருபவராகவும் 20க்கும் மேற்பட்ட உலக அரசுகளையும் ஒரு ஆன்மீக அரசையும் நிறுவியவராக அவர்கள் இருந்தார்கள். மனிதத்தன்மையின் மகத்துவத்தை பிரித்தறிவதற்காக எந்த அளவுகோலை வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளுங்கள். எப்போதாவது முஹம்மது (ஸல்) அவர்களை விட மகத்தான ஒரு மனிதர் பிறந்துள்ளாரா?

**பிறகு John Devenport அவர்கள் எழுதுகின்றார்:**

எந்த நபர் அரபு நாட்டைச் சார்ந்த மக்கள் செய்து வந்த இந்த அற்பமான இழிவான சிலை வணக்கத்திற்குப் பதிலாக உண்மையான இறைவனை வணங்குவதை நிலைநாட்டி எப்போதும் இருந்து வரும் பெரும் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் பொய் நபியாக இருக்க முடியுமா? இந்த விசயத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா? நாம் இந்த உணர்வுமிக்க செயல்திறன் கொண்ட சீர்திருத்தவாதியை ஏமாற்றுக்காரர் என்று கூற முடியுமா? அப்படிப்பட்ட நபரது எல்லா செயல்களும் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்று நம்மால் கூற முடியுமா? ஒருபோதும் அவ்வாறு கூற முடியாது.

சந்தேகமின்றி முஹம்மது (ஸல்) அவர்கள் உள்ளத்திலுள்ள நல்லெண்ணம், நேர்மை ஆகியவற்றைத் தவிர வேறு எந்த காரணத்தாலும் ஆரம்பத்தில் அவர்கள் வஹி இறங்கிய காலத்திலிருந்து அவர்களது இறுதி

மூச்சு உள்ள வரை அவர்கள் அதில் நிலைத்திருக்க முடியாது. மக்கள் எப்போதும் அவர்களுக்கு அருகில் இருந்து வந்தார்கள். அவர்களோடு நெருங்கிய தொடர்புள்ளவர்களுக்கு கூட அவர்களிடம் வெளிவேசம் இருக்குமோ என்ற சந்தேகம் ஒருபோதும் எழவில்லை.

**பிறகு எழுதுகின்றார்:**

இந்த விசயங்களை உறுதியுடனும் முழுமையான உண்மையுடனும் நம்மால் கூற முடியும். அதாவது மேற்கத்திய நாடுகளிலுள்ள இளவரசர்கள், முஸ்லிம் முஹாஜிதீன்களும், துருக்கியர்களும் இருந்த இடத்தில் ஆசியாவின் ஆட்சியாளர்களாக இருந்திருந்தால் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களிடம் காட்டிய இத்தகைய மத நல்லிணக்கத்தை அவர்கள் முஸ்லிம்களிடம் காட்டியிருக்க முடியாது. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபாடு கொண்ட தமது மதத்தைச் சேர்ந்தவர்களையே மிகக் கொடூரமான முறையில் சித்ரவதை செய்துள்ளனர்.

**பிறகு John Devenport அவர்கள் எழுதுகின்றார்கள்:**

நீதியை கடைபிடிப்பவர்கள், வெற்றி பெற்றவர்கள் ஆகியோரில் ஒருவரது வாழ்க்கை வரலாறு கூட முஹம்மது (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு போன்று மிகவும் விளக்கமாகவும் உண்மையாகவும் இருக்கவில்லை.

**பிறகு Michael H.Hart என்பவர் Ranking of the Most Influencial Persons in History என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:**

உலகில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்திய மக்களில் முஹம்மது (ஸல்) அவர்களது பெயரை முதலாவதாக தேர்ந்தெடுத்திருப்பது இதைப் படிக்கின்ற சிலரை வியப்பில் ஆழ்த்தி விடலாம். சிலர் இதுபற்றி கேள்வியும் கேட்பார்கள். இந்த நபர் மட்டும் தான் மார்க்க அளவிலும், உலக அளவிலும் ஆகிய இந்த இரண்டு நிலையிலும் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றவராவார். மனித வரலாற்றின் மீது முஹம்மது (ஸல்) அவர்கள் எப்படி தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் என்பதைப் பற்றி எவர்தான் கணித்துக் கூற முடியும்? மற்ற மதத்தைச் சார்ந்திருப்பவர்களைப் போன்றே இஸ்லாமும் தன்னைப் பின்பற்றும் நபர்களது வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இதன் காரணமாக உலகில் இருக்கின்ற மகத்தான மதங்களின் தோற்றுனர்களுக்கு இந்த நூலில் முக்கியமான இடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

**பிறகு எழுதுகின்றார்கள்:**

ஒரு கணிப்பின்படி உலகில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை முஸ்லிம்களின் எண்ணிக்கையை விட இரு மடங்கு அதிகமாக இருக்கின்றது.

இது அவர் இதனை எழுதிய சமயத்தில் கூறிய எண்ணிக்கையாகும்.

இந்த வகையில் முஹம்மது (ஸல்) அவர்களை ஈஸாவை விட முதலில் வைத்திருப்பது ஒருவேளை உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் எனது இந்த தீர்ப்பிற்கு பின்னால் இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதல் காரணம், கிறிஸ்தவத்தின் வளர்ச்சியில் ஈஸா (அலை) அவர்களுக்கு இருக்கும் பங்கை விட முஹம்மது (ஸல்)அவர்களுக்கு இஸ்லாத்தின் வளர்ச்சியில் எவ்வளவோ அதிகமாக முக்கியமான பங்கு இருக்கின்றது. ஈஸா (அலை) அவர்கள் தான் கிறிஸ்தவத்தின் நல்லொழுக்க, ஆன்மீக வாழ்விற்கான வழிகாட்டிகளுக்கு காரணமாக இருந்தார்கள். (யூதர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த அந்த கிறிஸ்தவம் தோன்றக் காரணமாக இருந்தார்கள்.) ஆனால் கிறிஸ்தவத்திற்கு வளர்ச்சியை ஏற்படுத்துவதில் புனித பவுல் அவர்கள்தான் அதற்கான அடித்தளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கை வகிக்கின்றார். தற்போதுள்ள கிறிஸ்தவத்தை வடிவமைத்துத் தந்தவரும் புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியை எழுதியவரும் புனித பவுல் அவர்களேயாவார்கள்.

**பிறகு எழுதுகின்றார்:**

இஸ்லாம் மார்க்கம் மற்றும் இதிலுள்ள அனைத்து நல்லொழுக்க மார்க்க நெறிகளுக்கான பொறுப்பாளராக முஹம்மது (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த புதிய மதத்தை தாமே வடிவமைத்து தந்து இஸ்லாமிய போதனைகளை நடைமுறைப்படுத்துவதில் அடிப்படையான முக்கியமான பங்கு வகிக்கின்றார்கள். இதை தவிர முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களது அகப்பார்வையை பிரதிபலிக்கக்கூடிய ஒரு நூலாக இருக்கின்றது. இதை எழுதியவரும் முஹம்மதே ஆவார்கள்.

எவ்வாறிருப்பினும், அவர் எதிரியாக இருப்பதால் இப்படித்தான் எழுதுவார்.

**கூறுகின்றார்:** முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த நூல் இறைவன் புறமிருந்து தனக்கு வஹியாக இறக்கப்பட்டது என்று கூறுகின்றார். குர்ஆனின் பெரும் பகுதி முஹம்மது (ஸல்) அவர்களது காலத்திலேயே எழுதப்பட்டு அவர்களது வாழ்நாளிலேயே அது பாதுகாக்கப்பட்டிருந்தது. அவர்கள் வஃபாத் ஆகி சிறிது காலம் கழிந்த பிறகு இது ஒட்டுமொத்தமாக ஒரு தொகுப்பு நூலின் வடிவில் பாதுகாக்கப்பட்டது. எனவே குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களது போதனைகள், அன்னாரது எண்ணங்கள் ஆகியவற்றை உண்மையான முறையில் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கின்றது. சிந்தனையாளர்களின் கருத்தின்படி இதிலுள்ளவை அவர்களது சொற்களேயாகும். ஈஸா (அலை) அவர்களது போதனைகள் அடங்கிய இத்தகைய ஒரு தொகுப்பு நூலும் இல்லை. கிறிஸ்தவர்களின் பார்வையில் பைபிளுக்கு எந்த அளவு முக்கியத்துவம் இருக்கின்றதோ அதே அளவுதான் முஸ்லிம்களின் பார்வையில் குர்ஆனுக்கு முக்கியத்துவம் இருக்கின்றது. குர்ஆன் மூலமாக முஹம்மது (ஸல்) அவர்கள் மக்கள் மீது நிறைவான வழிமுறைகள் மூலம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். ஒட்டுமொத்தமாக ஈஸா (அலை) அவர்களும் புனித பவுல் அவர்களும் கிறிஸ்தவம் மூலமாக மக்களிடம் ஏற்படுத்திய தாக்கத்தை விட இஸ்லாம் மூலமாக முஹம்மது (ஸல்) அவர்கள் மக்களிடம் ஏற்படுத்திய தாக்கமே மிக அதிகமாக இருக்கின்றது என்பதே மிகைத்து நிற்கின்ற எண்ணமாக இருக்கின்றது. மார்க்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட பார்த்தால் மனித வரலாற்றில் எந்த அளவு ஈஸா (அலை) அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்தினார்களோ அதே அளவு தாக்கத்தை முஹம்மது (ஸல்) அவர்களும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

எவ்வாறிருப்பினும், இது அவரது கருத்தாகும். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களது பெயர் முதலில் இருப்பதை இவர் ஏற்றுக் கொள்கின்றார். தொடர்ந்து அவர் இதையும் எழுதியுள்ளார்:

பெருமானார் (ஸல்) அவர்கள், மார்க்க தலைவராக இருந்தது போன்றே உலக ஆட்சியின் தலைவராகவும் இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இந்தத் தகுதி கிடைக்கவில்லை என்று அவர் எழுதுகின்றார். எனவே ஒவ்வொரு விசயத்திலும் அவர்களது முன்மாதிரி அவர்களை மேலும் ஒளிமயமானவராக எடுத்துக் காட்டுகிறது.

**பிறகு Biography of Prophet என்ற நூலில் Karen Armstrong எழுதுகின்றார்:**

முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீகத்தை நிலைநிறுத்துவதற்கு செயலளவில் பூஜ்ஜியத்திலிருந்து தனது பணியை ஆரம்பிக்க வேண்டியது வந்தது. எப்போது அவர்கள் தனது பிரச்சாரத்தில் ஆரம்பம் செய்தார்களே நடுநிலையுடன் சிந்திக்கும் ஒருவர் இந்த பிரச்சாரத்தில் அவர் வெற்றி பெறுவார் என்பதை சாத்தியமற்ற ஒன்றாகவே கருதுவார். அரபு சமுதாயம் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ள முற்றிலும் தயாராக இருக்கவில்லை. அவர்கள் இப்போது உயர்ந்த தரத்தை உடைய கருத்துக்களை அதாவது தவ்ஹீதை ஏற்றுக் கொள்ளத் தகுதி உடையவர்களாக இருக்கவில்லை.

உண்மையில் இப்படிப்பட்ட கடுமையான அபாயகரமான சமுதாயத்தில் இந்த கருத்தை அறிமுகப்படுத்துவது மிகவும் அபாயகரமானதாக இருந்திருக்கக் கூடும். இந்த சமுதாயத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களது வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொண்டார்கள் என்றால் உறுதியாக அவர்கள் மிகுந்த

நற்பாக்கியம் உடையவராக இருக்கின்றார்கள். உண்மையில் முஹம்மது (ஸல்) அவர்களது உயிர் பெரும்பாலும் அபாயங்களில் வீழ்ந்து கிடந்தது. அது பாதுகாப்பாக இருந்தது. ஏறக்குறைய ஒரு அற்புதமேயாகும். ஆனால் இதில் முஹம்மதே வெற்றி பெற்றார். (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தனது வாழ்க்கை முடிந்து போகின்ற வரையில் முஹம்மது (ஸல்) அவர்கள் பல்வேறு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் தமக்கிடையே கடுமையாக நடந்து கொள்கின்ற அந்த பழைய மரபுகளை முற்றிலும் அவர்கள் தகர்த்தெரிந்து விட்டார்கள். அரபு சமுதாயத்திற்கு மார்க்கம் இல்லாமல் இருப்பது என்பது ஒரு பிரச்சனையே அல்ல. சமுதாயம் தனது வரலாற்றின் ஒரு புதிய காலக்கட்டத்திற்குள் நுழையத் தயாராக இருந்தது.

**தொடர்ந்து Caron Armstrong என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:**

இறுதியில் மேற்கிலுள்ள இவர்கள்தான் (அதாவது கிறிஸ்தவர்கள் தொடர்பாக இவர் எழுதுகின்றார்) மார்க்க விவாதங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தார்கள். இஸ்லாம் அவ்வாறு செய்யவில்லை. சிலுவைப் போர்களின் போது ஐரோப்பா மற்றவர்களது கருத்துக்களை அமுக்குவதில் உள்ள ஆர்வத்தில் பைத்தியமாகவே ஆகிவிட்டது என்றே தோன்றுகிறது. எந்த அளவு ஆர்வத்துடன் அது தனது எதிரிகளுக்கு தண்டனையை வழங்கி இருக்கின்றதென்றால் அந்த அளவு தண்டனையை மார்க்க வரலாற்றில் உதாரணமாக கூட எங்கும் பார்க்க முடியவில்லை. கருத்து வேறுபாடுகள் கொண்டவர்கள் மீது அநீதியிழைப்பது, Protestants மீது கத்தோலிக்கர்கள் இழைத்த கொடுமைகள், இவ்வாறே கத்தோலிக்கர்கள் மீது Protestants இழைத்த கொடுமைகளின் ஆகியவற்றின் அடிப்படை புரிந்து கொள்ள முடியாத மதக்கொள்கைகளால் ஏற்பட்டதாகும். கொள்கையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை யூத மதமும் இஸ்லாமும் கட்டாயப்படுத்தாமல் அவரவரது தனிப்பட்ட உரிமையாக கருதின. கிறிஸ்தவத்தின் மார்க்கமற்ற கொள்கைளுக்கு இஸ்லாத்துடனும் யூத மதத்துடனும் எந்த தொடர்பும் இல்லை. அது இறைவனைப் பற்றிய மனிதனின் கற்பனையை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத இடம் வரை கொண்டு செல்கிறது. மாறாக, அவனை இணை வைப்பவனாக உருவாக்கின்றது.

**பிறகு Anni Besant தமது நூலான Life and Teachings of Muhammad -ல் இவ்வாறு எழுதுகின்றார்:**

அரபு நாட்டிலுள்ள மகத்தான நபியின் வாழ்க்கையையும், அவர் செய்த பணிகளையும் படிக்கக்கூடிய ஒரு நபருக்கு அந்த நபி என்ன போதனையை வழங்கினார்? மேலும் அவர் எப்படி தனது வாழ்க்கையை கழித்தார் என்பதை அவர் அறிந்திருந்தால் இறைவனது நபிமார்களில் இந்த மகத்தான நபிக்கு கண்ணியமளிக்காமல் இருப்பது அவரால் சாத்தியமற்ற ஒன்றாகும். நான் கூறுகின்ற இந்த விசயங்கள் தொடர்பாக இதற்கு முன்னர் பல மக்களுக்கும் தெரிந்திருக்கலாம். இந்த விசயங்களை நான் எப்போது படித்தாலும் எனக்கு இந்த அரபு ஆசிரியருக்கு கண்ணியமளிக்க வேண்டும் என்ற ஒரு புதிய உணர்வு ஏற்படுகின்றது. அவர்களது வரலாற்றின் ஒரு புதிய நிறம் தெரிகின்றது.

**பிறகு Ruth Cranston “World Faith” என்ற நூலில் எழுதுகின்றார்:**

முஹம்மது அரபி (ஸல்) அவர்கள் போர் செய்வதை அல்லது இரத்தம் சிந்துவதை ஒருபோதும் துவக்கவில்லை. அவர்கள் போரிட்ட ஒவ்வொரு போரும் தற்காப்புக்காக செய்யப்பட்டதாகும். தான் எஞ்சியிருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் இந்த போர்களை செய்துள்ளார். அந்தக் காலத்திலுள்ள வழக்கத்திற்கேற்ப அவர்கள் பயன்படுத்தும் ஆயுதங்களைக் கொண்டும் அக்காலத்து வழிமுறைகளுக்கு ஏற்பவும் அவர்கள் போரிட்டார்கள்.

**1949 ஆம் ஆண்டில் இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது. அதில் அவர் எழுதுகின்றார்:**

14 கோடி கிறிஸ்தவர்களில் 1,20,000 மனிதர்களை ஒரு அணுகுண்டு மூலம் அழித்து விட்டார்கள். இந்த சம்பவம் இப்போது தான் நடந்தது. ஆனால் எந்தவொரு சமுதாயமும் தனது இத்தகைய ஒரு தலைவரை சந்தேகப் பார்வையுடன் பார்க்காது. அவர்கள் செய்த அனைத்துப் போர்களின் போதும் மிகவும் மோசமான சமயங்களில்

கூட 500 அல்லது 600 பேர்களை மட்டுமே அவர் தனது வாளுக்கு இறையாக்கி இருக்கின்றார். அரபியிலுள்ள நபியின் கைகளால் ஏழாவது நூற்றாண்டின் இருள் நிறைந்த காலக்கட்டத்தில் மக்களில் ஒருவர் மற்றவரது இரத்தத்தை குடிக்க தாகமாக இருந்த சமயத்தில் நடந்த இந்த அழிவுகளை இன்றைய 20வது நூற்றாண்டின் ஒளிமயமான சிந்தனைகளைக் கொண்ட இக்காலத்தில் நடைபெறும் அழிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது முட்டாள்தனத்தை தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது. சிலுவைப் போரின் போது நடைபெற்ற கொலைகள் பற்றிய விபரங்களை கிறிஸ்தவ போர் வீரர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் இந்த மார்க்கமற்றவர்களது சடலங்களுக்கு மத்தியில் குதிகால்களில் இரத்தம் படிந்த நிலையில் இங்குமங்கும் சென்று கொண்டிருந்தனர்.

**பிறகு God Fragen எழுதுகின்றார்:**

இந்த விசயத்தை விட அதிகமாக பொதுவாக வேறு எந்த விசயத்தையும் நாம் கேள்விப்படவில்லை. கிறிஸ்தவ பாதிரகள் முஹம்மது (ஸல்) அவர்களது மதத்தை காழ்ப்புணர்ச்சியுடையதாகவும் மத சகிப்புத்தன்மையற்றதாகவும் கருதுவதால் அதை அவர்கள் ஏசுகின்றனர். இது மிகப்பெரும் நயவஞ்சகமாகும்.

கிறிஸ்தவர்களாக மாறிய முஸ்லிம்களை ஸ்பெயினிலிருந்து துரத்தியவர்கள் யார்? அதற்கு காரணம் அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை என்பதேயாகும். மெக்சிகோவிலும் பெருவிலும் யார் இலட்சக்கணக்கான மக்களை தங்களது வாளுக்கு இரையாக்கினார்கள்? மேலும் அவர்கள் கிறிஸ்தவர்களாக இல்லாமல் இருந்ததால் அவர்களை அடிமைகளாக ஆக்கியவர்கள் யார்? ஆனால் எத்தகைய சிறந்த முன்மாதிரியை முஸ்லிம்கள் கிரீஸில் காட்டியிருக்கின்றார்கள்? நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்களை அவர்களது மதம், அவர்களது பாதிரிமார்கள், துறவிகள் அவர்களது ஆலயங்கள் ஆகியவற்றுடன் தங்களது ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் இடங்களில் அமைதியாக அவர்களை வாழவிட்டார்கள். கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள அந்த வேறுபாட்டை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

**இதே God Fragen மேலும் எழுதுகின்றார்:**

இஸ்லாத்தின் கலீஃபாக்களின் முழு வரலாற்றிலும் Inquisition போன்ற அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய விசயம் போன்று அதில் பாதியை விட குறைவான அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களை நம்மால் பார்க்க இயலாது. மார்க்கக் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரையாவது எரித்ததாகவோ அல்லது ஒருவர் தாம் கூறுகின்ற மார்க்கத்தை, இஸ்லாத்தை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகவோ நடைபெற்ற ஒரு சம்பவத்தைக்கூட அவர்களால் காட்ட முடியாது. இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு கொடுத்த அசல் போதனையாகும்.

**பிறகு History of the Ceresan Empire என்ற நூலில் Edward Gibbon அவர்கள் எழுதுகின்றார்கள்:**

பெருமானார் (ஸல்) அவர்களது மார்க்கத்தை தப்லீக் செய்யாமலேயே அது என்றென்றும் நிலைத்திருப்பது நமது வியப்பிற்கு காரணமாக இருக்கின்றது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவிலும் மதீனாவிலும் கலப்பற்ற மற்றும் முழுமையான தமது அடிச்சுவடுகளை பதித்து விட்டார்கள். 12 நூற்றாண்டுகளாக நடைபெற்ற புரட்சிக்குப் பிறகும் கூட அதனை – குர்ஆனை – இந்த புதிய கொள்கையை பின்பற்றக்கூடிய இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள், துருக்கியர்கள் இன்றுவரை பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்களது சீடர்கள் தனது மதத்தையும், கொள்கைகளையும் ஒரு மனிதனின் எண்ணங்களோடு ஒன்றச் செய்வதற்கான சோதனையில் அதற்காக மணல்களில் ஏற்படும் சலனங்களை எதிர்த்து நிற்பதில் உறுதியாக இருந்தார்கள். இஸ்லாத்தின் சாதாரணமான மாற்ற முடியாத தகுதியுடைய உறுதிமொழி என்னவென்றால் நான் இறைவன் ஒருவனாவான் என்றும் இறைவனுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்கின்றேன் என்பதாகும். அதாவது முஸ்லிம்ளின் எண்ணங்களிலுள்ள இறைவன் சீர்குலைந்து போய் மறுப்பதற்கு தகுதியுள்ள ஒரு சிலையாக அவன் ஆகவில்லை. இறைதூதரின் நற்பண்புகள் மனிதனுக்குரிய எல்லையைக் கடந்து நிற்கவில்லை. அவர்களது உயிருள்ள சிறந்த அறிவுரைகள் அவர்களை பின்பற்றியவர்களை அவர்கள் தமது நன்றி உணர்வை அதற்காக வெளிப்படுத்தும் போதும் கூட அதனை அறிவு

மற்றும் மார்க்கத்தின் எல்லைக்குள் தான் வைத்திருக்கின்றது. ஆனால், அதற்கு எதிரில் கிறிஸ்தவர்கள் ஒரு அடியானை இறைவனாக்கி விட்டார்கள் என்பதைத் தான் அவர் கூற விரும்புகிறார்.

இந்த மகத்தான மனிதரின் தூதுச் செய்தியை உலகம் புரிந்து கொள்ளுமாறு அல்லாஹ் செய்வானாக! அந்த தூதுச் செய்தியைப் புரிந்து கொண்டு மார்க்கமில்லாமல் இருப்பதிலிருந்தும் அல்லது எதிர்ப்பதிலிருந்தும் பரிகாசம் செய்வதிலிருந்தும் விலகி அவர்களது கைகளின்கீழ் அடைக்கலம் புகுவதற்கு அவர்கள் முயற்ச செய்பவர்களாக அவர்கள் ஆகட்டுமாக! அல்லாஹ்வின் தண்டனையிலிருந்தும் அவர்கள் தப்பிக்கட்டும். உலகிற்கு இரட்சிப்பை வழங்கக் கூடியவர் பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமேயாவார்கள். உண்மையை விரும்பும் ஒவ்வொருவரும், நீதியை கடைபிடிப்பவரும், நேர்மையாளரும் முஹம்மது (ஸல்) அவர்கள் தொடர்பாக நான் கூறிய அதே கருத்துக்களை தான் கூறுவார்கள். நான் இப்போது படித்த மேற்கோள்கள் போன்ற எண்ணற்ற மேற்கோள்கள் உள்ளன. இதற்கு முன்னர் தோன்றிய நபிமார்களது உண்மையும் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாகவே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த கத்முன்னுபுவ்வத்தின் உயர் தகுதி பற்றி தான் ஒவ்வொரு அஹ்மதியும் உலகில் பிரச்சாரம் செய்ய வேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். இது தொடர்பாக நான் இதையும் கூறி விடுகின்றேன்.

நேற்றிலிருந்து ரப்வாவில் கத்முன்னுபுவ்வத் மாநாடு நடந்து கொண்டிருக்கின்றது. இன்று இந்த சமயத்தில் அது நிறைவு பெற்றிருக்கும். இதில் அரசியல் விசயங்களும், நல்லொழுக்கத்திற்கு மாற்றமாக இருக்கின்ற சொற்பொழிவுகளும், அஹ்மதிகளை ஏசிப்பேசுவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தரக்குறைவான சொற்களைக் கூறுவதைத் தவிர வேறு எதுவும் நடக்காது. இவை எல்லாமே ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள பேரன்பின் காரணமாக நடக்கின்றது என்றும் கத்முன்னுபுவ்வத்தின் பெயரில் நடக்கின்றது என்றும் இவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! கத்முன்னுபுவ்வத்தின் உயர் தகுதியை நாம் உலகிற்கு பறைசாற்றுகின்றோம் என்று இவர்கள் நினைக்கின்றனர். இது அவர்களது செயலாகும். நான் கூறியதைப் போன்று கத்முன்னுபுவ்வத்தின் உண்மை நிலை பற்றி உலகிற்கு தெரிவிப்பது அஹ்மதியின் பணியாகும். பெருமானார் (ஸல்) அவர்களது தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைக்கும் போதுதான் இது சாத்தியமாகும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இரண்டு வாரத்திற்கு முன்னால் செப்டம்பர் மாதம் 21ம் தேதி நான் நிகழ்த்திய குத்பா உரையில் உலகிலுள்ள முஸ்லிம் வழக்குறைஞர்கள் ஒன்றுசேர வேண்டும் என்று கூறியிருந்தேன். ஆனால் முஸ்லிம் வழக்குறைஞர்கள் ஒன்றுசேர்கின்றார்களா இல்லையா? என்பது நமக்கு தெரியாது. அஹ்மதி வழக்குறைஞர்கள் கொஞ்சம் வேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். பாகிஸ்தானிலும் இது நடக்கின்றது. மார்க்க உணர்வகளை கருத்தில் கொள்வது கருத்து சுதந்திரத்திற்கான எல்லையை நிர்ணயிப்பது ஆகியவை தொடர்பாக நாம் என்ன செய்ய வேண்டும்? இது தொடர்பாக சில விசயங்களை அவர்கள் ஒன்றுசேர்த்துள்ளார்கள். சில குறிப்புகளை எடுத்துள்ளனர். பல்வேறு நாடுகளிலுள்ள நீதிமன்றங்களில் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள், அவர்களது சட்டங்கள், சர்வதேச அளவிலுள்ள சட்டங்கள் ஆகியவற்றை முன்னிறுத்தி சில கேள்விகளை அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதை அவர்கள் இங்கும் அனுப்பி வைத்தார்கள். அதை நான் பல்வேறு நாடுகளிலுள்ள அஹ்மதி வழக்குறைஞர்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். பாகிஸ்தானிலுள்ள அஹ்மதி வழக்குறைஞர்களுக்கு நான் இதுபற்றி முதலிலேயே கவனமூட்டியிருக்கின்றேன். நமது வழக்குறைஞர்களில் ஒருவர் முஸ்லிம் வழக்குறைஞர்களுடன் அமர்ந்திருந்த போது இந்த பணியை யாராவது ஓர் அமைப்பின் கீழ் இருந்தவாறு செய்ய முடியும் என்றால் அதை அஹ்மதிய்யா ஜமாஅத் தான் செய்ய முடியும் என்று அவர்கள் கூறியுள்ளனர். எனவே நீங்கள் தான் இந்த கேள்வியை உலகில் எழுப்ப வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், உலகிலுள்ள பல்வேறு அஹ்மதி வழக்குறைஞர்களுக்கு நான் இதை அனுப்பி வைத்திருக்கின்றேன். அவர்கள் இதைப் பற்றி சிந்தித்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றி கூற வேண்டும். இதுபற்றி இவர்கள் விரைவாக சிந்திக்க வேண்டும். அவர்களது கருத்துக்களை எனக்கு அனுப்ப வேண்டும். உலகிலுள்ள பல்வேறு வழக்குறைஞர்களின் கருத்து ஒன்றுசேர்கின்ற போது அதிலுள்ள ஒருவரது கருத்தை

மற்றவருக்கு அனுப்பி வைக்கலாம். அதற்கேற்ப செயல்ரீதியான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். அல்லாஹ் எல்லா அஹ்மதி வழக்குறைஞர்களுக்கும் விரைவாக இந்தப் பணியைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இவ்வாறே பல்வேறு நாடுகளிலுள்ள அஹ்மதி அரசியல்வாதிகள் அல்லது அரசியல்வாதிகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவர்கள் ஆகியோரும் இந்த விசயத்தை சிறந்த முறையில் ஃபோரம் –ல் வைக்க வேண்டும். கருத்து சுதந்திரத்திற்கு ஒரு எல்லையை நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறில்லையென்றால் உலகம் முன்பை விட அதிகமாக குழப்பத்தில் மூழ்கி விடும்.

இதுபற்றி நான் துஆவிற்கான அறிவிப்பையும் செய்கின்றேன். இன்றைய நாட்களில் முஸ்லிம் உம்மத்திற்காக அதிகமாக துஆ செய்யுங்கள். முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்க வேண்டும். அவர்கள் தமது குடிமக்களின் இரத்தத்துடன் விலையாடக் கூடாது. குடிமக்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் தவறாக வழிநடத்தும் தலைவர்களின் கருவியாகி மற்றவர்களது கழுத்துக்களை வெட்டக் கூடாது. முஸ்லிம் அரசாங்கங்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் மற்றவர்களது கருவிகளாக மாறி ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. இன்றைய நாட்களில் துருக்கியும் சிரியாவும் ஒருவருக்கொருவர் இத்தகைய தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. முஸ்லிம்களை முஸ்லிம்களுடன் சண்டை போட வைத்து அதன் மூலமாக சுய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது முஸ்லிம்களை எதிர்க்கின்ற சக்திகளின் பணியாக இருக்கின்றது. இதற்கேற்ப அவர்கள் செயல்பட முயற்சிகளை செய்கின்றனர். இது தொடர்பான அஜெண்டாவை அவர்கள் எல்லாவற்றையும் விட முதலாவதாக புரிந்து கொள்ளவில்லை. அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தை தனது பாதுகாப்பின் கீழ் வைப்பானாக! இந்த உண்மையை புரிவதற்கான அறிவை இந்த மக்களுக்கு அவன் வழங்குவானாக! அதன் மூலம் அவர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றுபவர்களாக ஆகட்டும்!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சிலரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இவர்களில் முதலாவது ஜனாஸா மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களது மகனான மதிப்பிற்குரிய காஜா ஸஹீர் அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர் சர்கோதாவிலுள்ள கோட் மூஃமின் என்ற பகுதியில் வசிப்பவராவார். இவரது கொள்ளு தாத்தாவான ஹாஜி அமீருத்தீன் சாஹிபின் காலத்தில் இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. நேற்று இரவு இவரை சஹீதாக்கியிருக்கின்றார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். சஹீது மர்ஹூமின் குடும்பத்தினருக்கு வியாபாரத்துடன் தொடர்பு இருந்து வந்தது. இதற்கு முன் ஒரு நீண்ட காலமாக இவர்கள் கோட் மூஃமினில் இருந்து வந்தனர். பிறகு சர்கோதாவிற்கு வந்து விட்டனர். இவர்கள் வியாபாரம் செய்யக் கூடியபவர்களாக இருந்தனர். நேற்று இரவு இவர் சஹீதாக்கப்படடார். இரவு 9–15 மணிக்கு இரவில் சைக்கிளில் ஒரு வேலை விசயமாக இவர் வெளியில் வந்த போது அங்கிருந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் முதலில் வெளியே தெருவில் மோட்டார் சைக்கிளில் நின்று ஏறிக் கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் இவர்கள் மீது துப்பாக்கி சூடு செய்தனர். தோட்டா அவர்களது வலது காதுக்கு கீழ் கழுத்தில் பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் ஓடி விட்டனர். வழியில் சென்ற ஒருவர் இதைப் பார்த்து Rescue வை சார்ந்தவர்களுக்கு போன் செய்தார். அவர்கள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இவர்களது வஃபாத் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூமிற்கு மார்க்க ரீதியாக ஒரு நீண்ட காலமாக எதிர்ப்பு இருந்து வந்தது. இந்த வருடம் ஏப்ரல் மாதத்தின் அக்கம் பக்கத்திலுள்ள கடைக்காரர்கள் இவர் வாடகைக்கு இருந்த கடையின் எஜமானரிடம் இவரது கடையை காலி செய்யும்படி கூறி வந்தனர். ஆனால் கடையின் எஜமானர் அவ்வாறு செய்ய மறுத்து விட்டார். பிறகு பல்வேறு வழிமுறைகள் மூலமாக இவருக்கு துன்பங்கள் கொடுத்தனர். இவரது கடையிலுள்ள பூட்டுகளில் ஸீல் வைத்தனர். ஊர்வலங்களை நடத்தினர். பொருட்களை உடைத்தனர். இயன்றவரை அவருக்கு துன்பங்களை கொடுத்தனர். அவ்வாறிருந்தும் அவர் உறுதியாக தமது கொள்கையில் நிலைத்திருந்தார். தனது வியாபாரத்தையும் தொடர்ந்து செய்து வந்தார். மிகுந்த எளிமை இவரிடம் காணப்பட்டது. பொருளாதாரத்தில் விரிவான நிலை இருந்தும் கூட சிறிய வேலைகளுக்காக இவர் சைக்கிளையே பயன்படுத்தி வந்தார். ஜமாஅத்தின்

எல்லா பொருளாதார திட்டங்களிலும் இவர்கள் பங்கு பெறுபவராக இருந்தார். மிகவும் நல்ல மனிதராக இருந்தார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவர்களுக்கு மனைவியைத் தவிர இரண்டு மகன்களும் மூன்று மகள்களும் உள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா சாஹிப்ஸாதி அமத்துஸ் ஸமீஹ் சாஹிபா உடையதாகும். இவர் மதிப்பிற்குரிய முஹம்மது இஸ்மாயில் சாஹிபுடைய மகளாவார்கள். மிர்ஸா ரஃபீஹ் அஹ்மது சாஹிபின் மனைவியாவார்கள். இவர் அக்டோர் 3ம் தேதி காலை 10.00 மணிக்கு ரப்வாவில் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1937 ஆம் ஆண்டில் இவர்கள் பிறந்தார்கள். காதியானில் இவர்கள் ஆரம்பக் கல்வியைக் கற்றார்கள். பிறகு பாகிஸ்தானில் வந்து மெட்ரிக் படித்தார்கள். 1952 ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது மகளான மதிப்பிற்குரிய மிர்ஸா ரஃபீஹ் அஹ்மது சாஹிபுடன் இவரது திருமணத்தை நடத்தி வைத்தார்கள். 1953 ஆம் ஆண்டு டிசம்பர் மாததத்தில் இவர்களது ருஹ்ஸதானா நடைபெற்றது. இன்று சடங்கு சம்பிரதாயம் அதிகமாக இருக்கின்றது. இதனால் பெரும் கூச்சல் எழுந்துள்ளது. இவர் தனது மகளிடம் எனது திருமணம் மிகவும் வியக்கத்தக்க சூழ்நிலையில் நடந்தது என்று கூறுகின்றார். ஆண்டு மாநாட்டின் நாட்களில் மாநாட்டின் இறுதி நாளான டிசம்பர் மாதம் 28ம் தேதி இவரது திருமணம் நடைபெற்றது. மாநாட்டு நாட்களில் எனது டியூட்டி இருந்து வந்தது. திருமணத்திற்கான நிகழ்ச்சி முதலில் இருக்கவில்லை. டியூட்டி கொடுத்து விட்டு வந்த பிறகு இவரது தாயார் இவரிடம் காலையில் உங்களது திருமணம் நடக்கும் என்று கூறினார்கள். அப்போது நான் மாநாட்டில் டியூட்டி செய்து அன்டாக்களை சுத்தம் செய்ததன் காரணமாக எனது கைகள் கருப்பாக இருந்தது. பெண்கள் ஒன்றுசேர்ந்து எனது கைகளை கழுவினர். அடுத்த நாள் எவ்வித மருதாணியும் கையில் போடாமலேயே திருமணம் நடந்து முடிந்தது என்று இவர் கூறுகின்றார்.

இலண்டனில் 1991 ஆம் ஆண்டில் இவருக்கு பை பாஸ் ஆபரேசன் நடந்தது. மிகவும் பொறுமைசாலி ஆவார்கள். யார் இவருக்கு ஆபரேசன் செய்தாரோ அவர் இவர் மிகுந்த பொறுமையைக் கடைபிடித்ததைப் பார்த்து நான் உங்களுக்கு சிறந்த பொறுமைசாலிக்கான விருது வழங்குகிறேன் என்று கூறினார். இதற்கு முன்னர் இவருக்கு கேன்சர் இருந்தது. ஒவ்வொரு நோயையும் இவர் மிகுந்த பொறுமையுடன் சகித்துக் கொண்டார்.

ஆண்டு மாநாட்டின் போது குறிப்பாக விருந்தினர்களுக்கு அதிகமாக தொண்டு செய்து வந்தார். இவரது வீடு விருந்தினர்களால் நிறைந்திருக்கும். ஆண்டு மாநாட்டின் போது முறையாக இவர் டியூட்டி கொடுத்து வந்தார். தனக்கு கீழ் வேலை பார்ப்பவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வார். யாரையும் அதட்டி பேச மாட்டார். இவர்களது குழந்தைகள் இவர்களைப் பற்றி தான தருமங்கள் வழங்குவது எங்களுக்கு தெரியவே தெரியாது. பிறருக்கும் தெரியாமலேயே கொடுத்து விடுவார்கள் என்று கூறுகின்றார். இவர்களது கையில் ஒரு சிறிய குர்ஆன் இருந்து வந்தது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்து வந்தார்கள். கிலாஃபத்துடன் இவருக்கு ஆழ்ந்த பற்று இருந்து வந்தது. இதில் தான் நன்மையும் பரக்கத்தும் இருக்கின்றது. இதைத் தொடர்ந்து நீடித்திருக்கும்படி செய்ய வேண்டும் என்று குழந்தைகளுக்கு போதித்து வந்தார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது நன்மைகளை நீடித்திருக்கும்படி செய்வதற்கான நல்வாய்ப்பை இவர்களது குழந்தைகளுக்கு வழங்குவானாக!

மூன்றாவது ஜனாஸா ஸாஹிவாலைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது சரீஃப் சாஹிப் அவர்களது மகனான காலித் அஹ்மது சாஹிப் ஆவார்கள். 2012 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் ஜெர்மனியில் நடந்த ஒரு விபத்தின் காரணமாக சில நாட்கள் கோமாவில் இருந்த பிறகு அக்டோபர் 1 ஆம் தேதி தமது 89வது வயதில் இவர் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1933 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் தேதி சியால்கோட்டிலுள்ள தல்வண்டியில் இவர் பிறந்தார். இவர்களது தந்தையார் சவுத்ரி முஹம்மது சரீஃப் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். அவர்களது தந்தையார் ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஜமாஅத்தே அஹ்மதிய்யா சாலிவால் மாவட்டத்தின் அமீர் ஆக இருந்தார். இவரது தாத்தாவான ஹஸ்ரத் நவாப் முஹம்மதீன் சாஹிப் ரப்வாவிலுள்ள நிலங்களை திரும்பப் பெறுவதில் பெரும் தொண்டாற்றியுள்ளார்கள். இவர்கள் சவுத்ரி ஸா நவாஸ் சாஹிபின் மருமகனாவார்கள். இங்கு U.K. –விலும் இவரை பலருக்கும் தெரியும். இன்றைய நாட்களில் கராச்சியிலுள்ள Defence Halqa –வின் துணை அமீராக

இவர்கள் இருந்தார்கள். ஏறக்குறைய 10 வருடங்கள் துணைச் செயலராக இருந்தார்கள். தலைமையக கஸா போர்டு ரப்வாவின் உறுப்பினராக இவர் இருந்துள்ளார். ஃபஸ்லே உமர் ஃபவுண்டேசன் டைரக்டர் ஆகவும் இவர் இருந்திருக்கின்றார். நான் கஸா துறையில் காஸியாக இருந்த சமயத்தில் சில காலம் அவர் என்னுடன் பணியாற்றியுள்ளார். அல்லாஹ்வின் அருளால் சிறந்த ஆலோசனைகளை கூறுபவராக இருந்தார். பொருளாதார திட்டங்களில் ஆர்வத்துடன் கலந்து கொள்பவராக இருந்தார். கிலாஃபத்துடன் ஆழ்ந்த பற்றுடன் தொடர்பும் இருந்தது. இங்கு ஆண்டு மாநாட்டின் போது எப்போதும் வருவார்கள். செல்வந்தராக இருந்தும் கூட எளிமையான இயல்பை உடையவராகவும் ஏழைகளை கவனிக்கக் கூடியவராகவும் தனிப்பட்ட முறையில் நீண்ட நாட்களுக்கு முன் ஒரு விசயத்தைக் கூறியிருந்தார். இவரின் கீழ் ஒரு பெங்காளி பணியாள் பணிபுரிந்து வந்தார். ஒருமுறை உரத்த குரலில் சற்று கடுமையாக அவரிடம் இவர் பேசினார். மாலை அவர்கள் வீடு திரும்பியதும் உங்களது பெங்காளி வேலையாள் மிகவும் துக்கத்துடன் இருக்கின்றார். நீங்கள் அவரை அதட்டியுள்ளீர்கள் என்று மனைவி கூறினார். இதைக்கேட்டதும் நான் அப்படி ஒன்றும் அவருடன் பேசவில்லை. நான் அவரிடம் மன்னிப்பு கேட்டு விடுகின்றேன் என்று கூறினார். இந்த அளவு அவரிடம் எளிமை இருந்தது. சிந்து மாகாணத்தில் இவர்களது நிலங்கள் இருந்தன. அதில் வேலை பார்த்த இந்துக்களை இவர் நல்ல முறையில் கவனித்து வந்தார். மாற்று மதத்தைச் சார்ந்தவர்களையும் நல்ல முறையில் கவனித்து வந்தார். இவரது வஃபாத் பற்றிய செய்தியைக் கேட்டு எல்லாருமே இவரது நல்லடக்கத்தில் கலந்து கொள்வதற்கு ரப்வா செல்வோம் என்று கூறினார்கள். பெண் தொழிலாளிகள் அங்கு பணிபுரிந்து வந்தனர். அவர்களுக்குரிய கூலியை அவர்களது கணவர்களிடம் கொடுக்கக் கூடாது. அவர்கள் அதனை அந்த பெண்களுக்கு கொடுப்பதில்லை. எனவே அதை அந்த பெண்களின் கைகளில் கொடுத்து விடுங்கள என்று அவர்கள் கூறுவார்கள். இவரது மேலாளர் எனக்கு எழுதியுள்ளார். அதில் சிந்து மாகாணத்தின் நிலைமைகள் மோசமாக உள்ளன. நாங்கள் ஏதாவதொரு வேலை விசயமாக வெளியில் சென்று விட்டு வீடு வந்து சேராமல் இருந்தால் மீண்டும் மீண்டும் போன் செய்து அதுபற்றி விசாரிப்பார்கள். இவருக்கு இவருடன் பணியாற்றுபவர்கள் மீது மிகுந்த அக்கறை இருக்கின்றது. தூய்மையை விரும்பக் கூடிய பணிவுடன் நடக்கின்ற ஒரு மனிதராக இவர் இருந்தார். விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் உதவிப்பணம் கொடுத்து உதவி வந்தார்கள். அவர்களது சுயமரியாதையைக் கருத்தில் கொண்டு அமைதியான முறையில் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

நம்மவர், மற்றவர் ஆகிய அனைவருடனும் இவர் நல்ல முறையில் நடந்து கொண்டார். மனைவியைத் தவிர இவருக்கு 2 மகள்களும் ஒரு மகளும் இருக்கின்றார்கள். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது பிள்ளைகளுக்கு இவரது நன்மையை நீடித்திருக்கும்படி செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு இந்த எல்லாரது ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்கப்படும்.

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.
**ON 05.10.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456